# எய்ட்ஸ் தாக்கி இறந்தவர்களுக்கு நினைவு அஞ்சலி




நேஷனல் லூதர்ன் ஹெல்த் மற்றும் மெடிக்கல் போர்டு சார்பில் எய்ட்ஸ் நோய் தாக்கி இறந்தவர்களுக்கு நினைவு நாள் நிகழ்ச்சி, புரசைவாக்கத்தில் நேற்று நடந்தது. இதில், எச்.ஐ.வி.,யால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி, விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

சென்னை, மே 18-

எய்ட்ஸ் நோய் தாக்கி இறந்தவர்களுக்கு மெழுகுவர்த்தி ஏற்றி, நினைவு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி, நேஷனல் லூதர்ன் மற்றும் மெடிக்கல் போர்டு சார்பில் சென்னை புரசைவாக்கத்தில் நேற்று நடந்தது.

ஷெல்டர் டிரஸ்ட்டில் உள்ள எச்.ஐ.வி.,யால் பாதிக்கப்பட்ட 20 குழந்தைகள் உட்பட 32 பேர் இதில், கலந்து கொண்டு மெழுகுவர்த்தி ஏற்றி, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ரயில்வே துறையின் சென்னை மண்டல பாதுகாப்புப் படை பிரிவின் உதவி கமிஷனர் தாமஸ்மோகன் ஜெயகுமார் பேசியதாவது:

எச்.ஐ.வி., பாதிக்கப்பட்டவர்கள் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடம் கொண்டு செல்வது அவசியம். ரத்த தானம் மற்றும் ஊசி போடுவதற்கு முன் மருத்துவ ரீதியான சோதனைகள் கட்டாயப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு மையம், தமிழகத்தில் 30 மாவட்டங்களில் சமூக நல சங்கங்களை அமைத்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியும், மக்களிடம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தி வருகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்து வருவது வரவேற்க வேண்டியது. எச்.ஐ.வி.,யால் பாதிக்கப்பட்டவர்கள் சமூகத்தில் எல்லாரையும் போல சமமாக மதிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தாமஸ்மோகன் ஜெயகுமார் பேசினார்.

நிகழ்ச்சியில், நேஷ்னல் லூதர்ன் ஹெல்த் மற்றும் மெடிக்கல் போர்டு செயல் இயக்குனர் சியாம் பிரசாத் மற்றும் பாசிடிவ் பெண்கள் கூட்டமைப்பின் தலைவர் கவுசல்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.